Hospice général

# LASLP இன் மேலோட்டம்

சமூக நலன்புரியும் வறுமைக்கு எதிரான போராட்டமும் தொடர்பான சட்டம் (LASLP) 2025 யனவரி 1 ஆம் திகதி நடைமுறைக்கு வரும். இச்சட்டம் தற்காலிகமாக ஒரு கடினமான நிலைமையில் இருக்கும் ஆட்களின் சமூக, தொழில் ஒருங்கிணைப்பிற் கவனஞ் செலுத்தும் ஆதரவை வழங்குகிறது.

- சமூக நலன்புரி என்பது ஓர் உரிமையாகும், அதனை அணுகுவது குறைந்த பட்ச நிருவாகத் தேவைப்பாடுகளுடன் எளிதாக்கப்படுகிறது.
- Hospice général இனால் வழங்கப்படும் சமூக ஆதரவு (வீட்டு வசதி, சுகாதாரம், பயிற்சி, வேலை போன்ற) உமது குறிப்பான தேவைகளை அடைந்து கொள்ள வடிவமைக்கப்பட்ட ஒரு திட்டத்தை ஒழுங்கமைப்பதைச் சாத்தியமாக்கும் ஒரு விரிவான கணிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டது.
- சமூக ஆதரவு இளம் ஆட்களுக்கும் குடும்பங்களுக்கும் பிள்ளைகளுக்கும் வழங்கப்படுகிறது.

எளிய ஒருங்கிணைப்பு

Hospice général பணிக்குழு உறுப்பினர்கள் உமக்கு நீர் மீண்டும் சுயாதீனமடைய உதவுவதுடன் உமக்கு இவற்றை வழங்குகின்றனர்:

- சமூகப் பிணைப்புகளைப் பேணவும் வலுப்படுத்தவும் நோக்கங் கொண்ட செயற்பாடுகள்;
- ஒரு திறன் கணிப்பீடும் தொழில் வழிகாட்டலும்;
- குறுகிய கால, நெடுங்காலப் பயற்சிப் பாடநெறிகள்;
- உமக்குப் புதிய திறன்களை அடைந்து கொள்ள இயலுமாக்கவென வணி உட்பயிற்சிகள்.

தொழில் ஊக்கக் கொடுப்பனவுகள்

இது உமக்கு உமது தொழில் பெறும் ஆற்றலைப் பேணவும் உமது வலையமைப்பை விரிவாக்கவும் இயலுமாக்குவதால் கிடைக்கப் பெறும் எத்தொழில் வாய்ப்பினதும் முழுமையான பயனைப் பெறுவது முக்கியம்.
ஒரு பகுதி நேர அடிப்படையிலாயினும் நீர் வேலை செய்யும் போது உமது நிதியுதவியிலிருந்து உமது சம்பளப் பகுதி கழிக்கப்படாததுடன் அதனால் உமது மாத வருமானம் கூடுகிறது.

நீர் ஈட்டும் முதல் 300 பிராங்குகள் உமக்கு வைத்துக் கொள்ளவாகும், அத்துடன் நீர் உமது சம்பளத்தின் 15% நிலுவையையும் தக்க வைத்துக் கொள்வீர்.

உமது வரவு செலவை முகாமை செய்வதில் மேலும் சுயாதீனத்துக்கான ஒட்டுமொத்தத் தொகைகள்
நீர் உமது தேவைகளுக்கும் விருப்பங்களுக்கும் ஏற்ப முகாமை செய்யும் இவ்வொட்டுமொத்தத் தொகைகள் உமக்கு ஒவ்வொரு மாதமும் கொடுக்கப்படுகின்றன.

- அடிப்படை ஒட்டுமொத்தத் தொகை உமதும் உமது குடும்பத்தினரதும் (உணவு, ஆடை, தொலைபேசி, மின்சாரம், பொழுதுபோக்கு நடவடிக்கைகள், பயணம் போன்ற) அன்றாடத் தேவைகளையும் உமது நிருவாகச் செலவுகளையும் உமது சமூக, தொழில் ஒருங்கிணைப்புடன் தொடர்பான செயல்களையும் உள்ளடக்குகிறது.
- சிறுவர் ஒட்டுமொத்தத் தொகை (கல்வியுதவி, பொழுதுபோக்கு நடவடிக்கைகள், இணைப் பாடவிதானச் செயற்பாடுகள் போன்ற) உமது பிள்ளைகளின் தேவைகளுடன் தொடர்பான குறிப்பான செலவுகளை உள்ளடக்குகிறது.

வாடகையும் சுகாதாரப் பராமரிப்புக் கட்டணங்களும் போன்ற வேறு செலவுகள் சிற்சில நிபந்தனைகளின் கீழ் உமது செலவுகளின் அடிப்படையில் Hospice général ஆல் வழங்கப்படுகின்றன.

நிருவாக எளிமையாக்கல்

கொடுக்கப்பட வேண்டிய ஒவ்வொரு 6 மாதமும் மாதாந்த ஒட்டுமொத்தத் தொகை பொதுவாகக் கணிக்கப்படுகிறது. உமது நிலைமை மாறினால், நீர் உடனடியாக எம்மிடம் கூறியாக வேண்டும். Hospice général உமது நிருவாக, நிதி ஆவணங்களை உம்மிடம் வழக்கமாக வேண்டுவதில்லை; இது குறிப்பான ஆட்களுக்குத் தத்தமது சமூக, தொழில் ஒருங்கிணைப்புத் திட்டத்திற் கவனஞ் செலுத்த இயலுமாக்குகிறது.

மேலும் விபரங்ககளுக்காக *laslp.hospicegeneral.ch* இற்குச் செல்க